**இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழு – 2017**

---

இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1979 இன் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குநரை ஊக்குவித்தல் அதிகாரச்சட்டத்தின் 27 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

**இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 22,958,914 கிரயமான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட தவறை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2018 புத்தாக்குநர் தினம் மற்றும் சர்வதேச புத்தாக்க கண்காட்சி என்பவற்றிற்காக மண்டப வசதிகளை முன்பதிவு செய்வதற்காக 2017 திசெம்பர் மாதத்தில் முற்பணமாக செலுத்தப்பட்ட ரூபா 1,482,797 தொகை நடைமுறைச் சொத்துக்களின் கீழ் முற்கொடுப்பனவு அல்லது முற்பணமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக 2017 ஆம் ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.3 பெற வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 5 வருடங்களிற்கு மேற்பட்ட காலத்திலிருந்து காணப்படுகின்ற தேசிய பயிலுநர் மற்றும் பயிற்சி அதிகாரசபையுடனான ஒப்பந்த சேவைகளிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 485,281 கூட்டுமொத்தமான முற்கொடுப்பனவு மற்றும் ஏனைய முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) புத்தாக்குநர்களுக்காக 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட கடன் தொகையில் ரூபா 9,317,683 ஆன நிலுவைக் கடன் மீதியை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையிலும் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைகள்

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2006 இன் தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவை | |
| (i) 3.4.3 மற்றும் 3.4.4 | சந்தை ஒப்பீட்டு விலை முறையின் பிரகாரம் கூறுவிலை கோரும் போது பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் அல்லது இலங்கை ரெலிகொம் வானவில் பக்கங்களில் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படக்கூடிய போதிலும் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 4,583,265 பெறுமதியான 2 பெறுகைகளிற்குரிய கூறுவிலைகள் கோரப்பட்டமைக்காக வழங்குநர் தெரிவு செய்யப்பட்ட முறைமை தெளிவாக இருக்கவில்லை. |
| (ii) 1.2.1(ஊ) | கேள்வி மதிப்பீட்டிலும் தெரிவுசெய்தல் நடைமுறையிலும் வெளிப்படைத் தன்மை மற்றும் நிலையான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக குறிப்புரைகளை தயாரிக்கும் போது தேவைப்பாடுகள் தெளிவாக வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் ரூபா 5,305,000 பெறுமதியான 2 பெறுகைகளிற்குரியதாக தயாரிக்கப்பட்டிருந்த குறிப்புரைகளில் ஆணைக்குழுவின் விசேட தேவைப்பாடுகள் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2015 மே 15 ஆம் திகதிய 01/2015/01 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கை | |
| (i) 04(அ)(1)(iii) ஆம் பிரிவு | வெளிநாட்டு பிரயாணத்திற்கான இணைந்த படியை செலுத்தும் போது இரண்டாவது வகைக்குரிய உத்தியோகத்தர்களிற்காக முதலாவது வகைக்குரியதாக கணிப்பிட்டு இணைந்த படி கொடுப்பனவு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் போது 2 வெளிநாட்டு புத்தாக்க போட்டிகளில் பங்குபற்றியிருந்த இரண்டு பல்கலைக்கழக விரிவுரையாளர்களிற்கான இணைந்த படிகளாக ரூபா 70,178 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

## 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆணைக்குழுவின் நிதி விளைவுகள் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான ரூபா 719,018 பற்றாக்குறையுடன் ஒப்பிடும் போது ரூபா 843,425 ஆன மிகையை விளைவித்திருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,562,443 ஆன முன்னேற்றமொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. எவ்வாறாயினும், ஊழியர் ஊதியம் ரூபா 2,301,300 ஆலும் தாபன மற்றும் நிர்வாகச் செலவினம் ரூபா 12,219,776 ஆலும் அதிகரித்திருந்த போதிலும், மீண்டெழும் மானியப் பெறுவனவு ரூபா 16,917,850 ஆல் அதிகரித்தமை மேற்படி முன்னேற்றத்திற்கு பிரதானமாக பங்களித்திருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் போது 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை நிதி விளைவுகளில் பற்றாக்குறையொன்று காணப்பட்ட போதிலும் 2017 ஆம் ஆண்டின் போது மிகையொன்று காணப்பட்டது. மேலும் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வைக் கவனத்தில் கொண்ட பின்னர் பங்களிப்பானது 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 23,029,875 ஆக காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

### 4.1.1 செயற்பாடுகளும் மீளாய்வும்

2013 தொடக்கம் 2017 வரையான ஆணைக்குழுவின் செயலாற்றல் மற்றும் மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பவற்றின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது ''சஹசக் நிமெவும்'' தேசிய போட்டியின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டிருந்த புதிய புத்தாக்கங்களின் எண்ணிக்கை 1,118 ஆக காணப்பட்டதுடன் அதில் வெற்றி பெற்ற புத்தாக்கங்களின் எண்ணிக்கை 318 ஆகும். எவ்வாறாயினும் 2014 – 2017 காலப்பகுதியின் போது ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்களை 63 புத்தாக்குநர்கள் மாத்திரமே பெற்றுக்கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இது போட்டிக்காக சமர்ப்பித்திருந்த புத்தாக்கங்களில் 5 சதவீதமாகவும் வெற்றிபெற்ற புத்தாக்கங்களில் 20 சதவீதமாகவும் இருந்தது.

(ஆ) புதிய புத்தாக்கநர்களிற்கான நிதி உதவியை வழங்குதல்

(i) புதிய புத்தாக்கநர்களிற்கான நிதி உதவியை வழங்கும் போது நிதி ஒத்துழைப்புக்களை வழங்குவது தொடர்பான நிபந்தனைகள் மற்றும் வழிகாட்டிகளை உள்ளடக்கி கைநூலொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ''நவ நிபெயும் திரிய 2016'' நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து நிதி உதவியை வழங்குவதற்காக 08 புதிய புத்தாக்குநர்கள் பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை 3 புத்தாக்குநர்களிற்கு மாத்திரம் நிதி உதவி வழங்கப்பட்டிருந்தது.

(iii) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் 11 புதிய புத்தாக்குநர்களிற்கு நிதி உதவியாக ரூபா 7,720,345 கூட்டுத்தொகை வழங்கப்பட்டிருந்தது. நிதிகளிற்கான தேவை மற்றும் நிதிகள் தேவைப்படும் சந்தர்ப்பம் என்பவற்றை முறையாக ஆய்வு செய்து நிதியளிக்கப்படாததன் காரணமாக 3 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 4,133,879 கூட்டுமொத்தமான நிதிகள் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்திருக்கவில்லை. கடன்கள் அல்லது உதவிகள் வழங்கப்பட்ட பின்னர் அவற்றின் செயன்முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்காக முறையான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்காதமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(இ) புத்தாக்கங்களை விற்பனை செய்வதற்காக புதிய புத்தாக்குநர்களிற்கு உதவிசெய்தல் ஆணைக்குழுவின் தொழிற்பாடொன்றாக உள்ளது. ''சஹசக் நிமெவும்'' கண்காட்சிக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த புத்தாக்கங்களை பகுப்பாய்வு செய்து அப் புத்தாக்கங்களை வணிகமயப்படுத்துவதற்கான இயலுமையுடன்/ வணிகமயப்படுத்துவதற்காக உதவி செய்யக்கூடிய தனியார் வியாபார நிறுவனங்களிற்கு அழைக்கப்பட்டு புத்தாக்குநர்கள் மற்றும் முதலீட்டாளர்களை தொடர்புபடுத்தும் பயனுள்ள சந்தர்ப்பமொன்றாக பயன்படுத்தப்பட முடிந்திருந்த போதிலும் அவ்வாறான நிறுவனங்கள் அழைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பாடசாலைகள், தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் புத்தாக்குநர் சங்கங்களை ஒழுங்கமைத்தல் ஆணைக்குழுவின் தொழிற்பாடொன்றாக காணப்பட்ட போதிலும் அவ்வாறான சங்கங்கள் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா 94,000,000 மதிப்பிடப்பட்ட கிரயத்தையடைய 13 செயற்பாடுகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அச் செயற்பாடுகளில் 11 இற்கான பௌதீக இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டிருக்காதமையால் அச் செயற்பாடுகளை அடைந்து கொள்ளும் செயன்முன்னேற்றம் மற்றும் விளைவுகள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட முடியாதிருந்தன.

(ஊ) புத்தாக்குநர்களிற்காக சமுதாயத்தில் முறையான அங்கீகாரத்தை வழங்குவதற்கும், சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மக்கள் குழுவொன்றாக அவர்களை உறுதிப்படுத்துவதற்கும், அவர்களிற்கான கௌரவத்தை வழங்குவதற்காகவும் படைப்பாளர்களை புத்தாக்கங்களிற்காக தொடர்புபடுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு அடையாள அட்டைகள் வழங்கும் நடைமுறை 2016 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. ரூபா 600,000 இற்கு 2000 அடையாள அட்டைகள் அச்சிடப்பட்டிருந்த போதிலும் 2018 மே மாதம் வரை 312 புத்தாக்குநர்களிற்கு மாத்திரமே அடையாள அட்டைகள் வழங்கப்பட்டிருந்தன.

(எ) புத்தாக்குநர்களிற்கு அவர்களின் புத்தாக்கங்களை சந்தைக்கு எடுத்துவந்து ஆராய்ச்சிகளை மேம்படுத்துவதற்கான பொறிமுறையொன்று காணப்படுகின்ற செயற்திட்டமொன்று மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2018 ஆகஸ்ட் வரை அதன் நிர்வாக நடவடிக்கைகளிற்காக ரூபா 4,701,920 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் எந்தவொரு புத்தாக்குநரிற்கோ அல்லது ஆராய்ச்சியாளரிற்கோ நிதி உதவி வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) ஆணைக்குழுவின் இணையத்தளத்தை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 2,000,000 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் புத்தாக்குநர்களை பதிவு செய்தல் மற்றும் புதிய புத்தாக்க கலாச்சாரத்தை உருவாக்குவதற்காக பங்களிப்புச் செய்வது இதனூடாக எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் புத்தாக்குநர்கள் அதில் பதிவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் வணிகமயப்படுத்தும் நோக்கத்துடனான புத்தாக்கங்கள் தொடர்பான விளம்பரத்தை இணையத்தளத்தில் மேற்கொள்ளக்கூடியதாக இருந்த போதிலும் அத்தகைய வேலைத்திட்டமொன்று அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கையில் புத்தாக்க கலாச்சரமொன்றை மேம்படுத்தி ஸ்தாபிப்பதற்காக ஊடக கொள்கையொன்றை தயாரித்தல்**

(i) இந்நோக்கத்திற்காக ஊடக மாநாடொன்றை நடாத்துவதற்காக ரூபா 1,680,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 2018 யூன் 30 வரையிலும் ஊடக கொள்கை எதுவும் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஊடகக் கொள்கையை தயாரிப்பதற்காக ரூபா 125,000 தொகை வளவாளர்களிற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஊடகக் கொள்கையை தயாரித்து ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய காலப்பகுதி, மேவுகை செய்யப்பட வேண்டிய பரப்புக்கள் எவை என்பதை உள்ளடக்கி வளவாளர்களுடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திண்மக் கழிவுகளை இயந்திரத்திற்கு துண்டுகளாக்கி தெரிவுசெய்யும் இயந்திரமொன்றை மேம்படுத்துவதற்காக புத்தாக்குநர் ஒருவரிற்கு இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் நிதி உதவியை வழங்குவதற்கு தீர்மானமொன்று எடுக்கப்பட்டிருந்ததுடன் 2017 யூலை 04 ஆம் திகதிய இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையக் கடிதத்தின் பிரகாரம் இயந்திரத்தின் கிரயம் ரூபா 335,369 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் இயந்திரத்தின் தகைமை தொடர்பாக பின்னர் அறிவிக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2017 யூலை மாதம் வரை உரிய தொகை புத்தாக்குநரிற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2018 ஏப்ரல் வரையிலும் இயந்திரத்தின் தகைமை தொடர்பான அறிக்கை பெறறுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) களனிப் பல்கலைக்கழகத்தின் மூலம் ஒழுங்கமைக்கப்பட்ட ''விஞ்ஞானம் 2017'' கண்காட்சிக்காக ஆணைக்குழுவினால் அனுசரணை வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 1,475,000 தொகை வழங்குவதற்காக இணங்கப்பட்டிருந்தது. அதில் 90 சதவீதம் அதாவது ரூபா 1,327,500 முற்பணமாக 2017 செப்தெம்பர் 1 இல் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2018 ஏப்ரல் வரையிலும் அது தொடர்பான செலவின அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வெளிநாட்டு கண்காட்சிக்காக புத்தாக்கங்களை பயன்படுத்தும் போது தெரிவுசெய்யப்பட்ட முறையான நடைமுறையொன்று அவதானிக்கப்பட்டிருக்காததுடன் 45 ஆவது ஜெனிவா கண்காட்சிக்காக புத்தாக்குநர்களை தெரிவு செய்யும் போது சஹசக் நிமெவும் 2016 கண்காட்சியின் திறந்த பிரிவில் வெற்றிபெற்ற புத்தாக்குநர்களிற்காக சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 4 துறைகளில் முதலாமிடம் கிடைத்த புத்தாக்குநர்களிற்காக சந்தர்ப்பம்

வழங்கப்படாமல் இரண்டாமிடத்தை பெற்ற 3 புத்தாக்கங்களிற்காக சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டிருந்தன. அப் புத்தாக்கங்கள் வெளிநாட்டு கண்காட்சிக்காக பயன்படுத்துவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்**

---

சஹசக் நிமெவும் கண்காட்சிக்காக புத்தாக்கங்கள் மற்றும் புத்தாக்குநர்களின் பெயர்களை உள்ளடக்கி ரூபா 390,000 செலவிட்டு 5000 புத்தகங்கள் அச்சிடப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 192,270 பெறுமதியான 2465 புத்தகங்கள் அதாவது ஏறத்தாழ 50 சதவீதம் எஞ்சியிருந்தது. இக் கண்காட்சி ஆணைக்குழுவின் மூலம் வருடாந்தம் ஒழுங்கமைக்கப்படுவதுடன் முன்னைய ஆண்டின் போதும் இவ்வாறு அச்சிடப்பட்ட புத்தகங்கள் கூடுதலான அளவில் எங்சியிருந்ததுடன் கடந்தகால அனுபவம் தொடர்பாக கவனம் செலுத்தாமல் மீளாய்வாண்டிலும் புத்தகங்கள் அச்சிடப்பட்டதனால் இவ்வாறு நட்டம் ஏற்பட்டிருந்தது.

**4.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

---

புத்தாக்குநர்களின் நிதியத்தில் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 4,213,081 தொகை காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் போது 03 புத்தாக்குநர்களிற்கு மாத்திரம் ரூபா 1,795,000 நிதி உதவி வழங்கப்பட்டிருந்ததுடன் நிதியம் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**5. நிலையேறான அபிவிருத்தி**

---

**5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளுதல்**

---

நிலைபேறான அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ''நிகழ்ச்சிநிரல்'' இன் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவகமும் முறையாக செயற்பட வேண்டும். மீளாய்வாண்டு தொடர்பாக இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழு அதன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற தொழிற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக அறிந்திருக்கவில்லை.

**6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

---

**6.1 பெறுகை மற்றும் ஒப்பந்த நடவடிக்கைகள்**

---

**6.1.1 பெறுகை**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1(அ) பிரிவின் பிரகாரம் பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட பெறுகைகளிருந்து பொருட்கள், சேவைகள், வேலைகள் மற்றும் மதியுரை சேவைகளாக வகைப்படுத்துவதற்கு பதிலாக ஆண்டின் போது மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் பிரகாரம் வகைப்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1(இ) பிரிவின் பிரகாரம் பொருட்கள், சேவைகள், வேலைகள் மற்றும் மதியுரை சேவைகளின் கீழ் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற ஒவ்வொரு பெறுகையிலும் அவற்றின் மதிப்பிடப்பட்ட பெறுமதி, பெறுகை முறை, ஒவ்வொரு பெறுகையினதும்

உப செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கான கால எல்லை என்பவற்றை உள்ளடக்கி விபரமான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மதியுரையாளர்களை தெரிவு செய்து சேவையில் ஈடுபடுத்துவதற்காக 2007 வழிகாட்டிக் கோவையை பின்பற்றாமல் 04 நிகழ்ச்சித்திட்ட ஒழுங்கமைப்பாளர்கள் பொருட்கள் மற்றும் வேலைகளிற்காக 2006 பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.4 ஆம் பிரிவின் பிரகாரம் சந்தை ஒப்பீட்டு விலை முறையை பின்பற்றி தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 10,734,765 கொடுப்பனவு செய்வதற்காக இணங்கப்பட்டிருந்த போதிலும் சேவைகளை நிறைவேற்றுவது தொடர்பாக இரண்டு தரப்பினர்களிற்கிடையே உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கையில் புத்தாக்குநர்களிற்கு அவர்களின் புத்தாக்கங்களை சந்தைக்கு எடுத்துவந்து ஆராய்ச்சிகளை மேம்படுத்துவதற்கான பொறிமுறையை உருவாக்கும் செயற்திட்டமொன்று மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் இச் செயற்பாட்டிற்காக ஒரு வருட காலப்பகுதிக்காக மதியுரை நிறுவனமொன்றை தெரிவு செய்து ரூபா 4,620,000 செலுத்துவதற்கு இணங்கப்பட்டிருந்தது. அவ் மதியுரை நிறுவனத்தை தெரிவு செய்தல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2017 யூலை 19 ஆம் திகதிய பீடி/எச்ஆர்டி/196/எம்ஜஎன்/ஜீ/2017 தேசிய பாதீட்டு திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரம் இந் நோக்கத்திற்காக மேலதிக பதவியணியினர் தேவைப்படுகின்ற போதிலும் இத் தேவைப்பாட்டிற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெறப்படுவது அவசியம் எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் 2017 ஆகஸ்ட் 31 ஆம் திகதிய எம்ரீஆர்/7/3/23 விஒஎல்-1 ஆம் இலக்க அமைச்சின் கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு வருட காலப்பகுதிக்காக மதியுரை நிறுவனம் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் தேவையான மேலதிக பதவியணியினருக்கான அங்கீகாரம் கணக்காய்வுத் திகதியான 2018 ஆகஸ்ட் வரையிலும் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மதியுரை நிறுவனத்தை தெரிவு செய்வதற்காக ஆர்வத்தை வெளிப்படுத்துதல் (Expression of Interest) ஆணைக்குழுவின் இணையத்தளத்திற்கு மேலதிகமாக புதினப் பத்திரிகை ஒன்றில் மாத்திரம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. மிகவும் தரமானதாகவும் ஆக்கபூர்வமானதாகவும் சேவையை பெற்றுக்கொள்வதற்காக பெறுகை பேட்டியானதாக இருக்க வேண்டியதால் ஆர்வ வெளிப்படுத்துதலை பெற்றுக்கொள்வதற்காக போதிய எண்ணிக்கையான புதினப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2007 இல் மதியுரை நிறுவனமொன்றை தெரிவுசெய்து சேவையில் ஈடுபடுத்துவதற்காக வழிகாட்டல்களிற்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

- 2.6.3 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் திணைக்கள மதியுரை பெறுகை குழு நியமனம் செய்யப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 3.4 ஆம் பிரிவின் பிரகாரம் தேவைப்படும் வளங்கள் தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டு கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- 2.3.1 (ஈ), 2.5 (உ) மற்றும் 6.2.1 ஆம் பிரிவுகளின் பிரகாரம் மதியுரை நிறுவனங்களிடமிருந்து முன்மொழிவுகளைப் பெற்று மதியுரை பெறுகை குழுவினால் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு மதியுரையாளர் தெரிவு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்படாமல் ஆர்வ வெளிப்படுத்தல் கடிதத்தை மதிப்பீடு செய்ததன் மூலம் மாத்திரமே மதியுரை நிறுவனம் தெரிவுசெய்யப்பட்டிருந்தது.

(iv) மதியுரை பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.2.1 இன் பிரகாரம் மதியுரையாளரொருவரை தெரிவு செய்யும் நடைமுறை வெளிப்படையாக மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் ஆர்வத்தை வெளிப்படுத்தியிருந்த நிறுவனங்களின் அனுபவங்கள், ஒரே தன்மையான நடவடிக்கைகள், வள ஒதுக்கீடு, நிதி மதிப்பீடுகள், வழங்கப்பட்ட மதியுரை சேவை பட்டியல்கள் மற்றும் சட்ட விடயங்கள் தொடர்பாக ஆர்வத்தை மதிப்பீடு செய்யும் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் பெறுகை நடவடிக்கை வெளிப்படையாக மேற்கொள்ளப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

(v) மதியுரை நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட 13 நடவடிக்கைகளில் 9 நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக மதியுரை நிறுவனத்திற்கான தேவையொன்று காணப்பட்டதால் கணக்காய்வின் போது இது சிக்கலாக காணப்பட்டது. மேலதிக பதவியணியினரை அங்கீகரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் செயற்பாட்டுக் கிரயத்தை குறைத்து அரசாங்க மானிய அளவை அதிகரித்து புத்தாக்கங்களை முன்னேற்றுவதற்காக பயன்படுத்த முடியுமென அவதானிக்கப்பட்டது.

## 6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் பாதீட்டில் மதிப்பிடப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கிடையே 10 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 04 செயற்பாடுகளிற்குரிய மதிப்பீட்டில் 90 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது காலரீதியாக மீளாய்வு செய்யப்பட்டு திருத்தம் செய்யக்கூடியதாக காணப்பட்ட போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் பாதீட்டில் மனித வள அபிவிருத்திக்காக ரூபா 5,000,000 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மனித வளத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் ஆணைக்குழுவின் ஆணையாளரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுப் பரப்புக்களும் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) பெறுகை முகாமைத்துவம் | (i) | கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் பங்குபற்றுவதற்கான அழைப்பிதழொன்று கேள்வி கோரல் கடிதங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு என்பவற்றின் உறுப்பினர்களால் இரகசியத் தன்மை, பாரபட்சமற்ற தன்மை மற்றும் தனிப்பட்ட கடப்பாடுகள் என்பவற்றின் உள்ளதன்மை தொடர்பாக வெளிப்படுத்தலொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) | கேள்வி திறக்கும் போது கேள்வியாளர்களின் பிரதிநிதிகள் சமுகமளித்திருந்தமையையோ அல்லது சமூகமளித்திருக்காதமையையோ உறுதிப்படுத்துவதற்கான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (iv) | பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு முன்னர் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை. |
| | (v) | மதியுரைப் பெறுகையின் போது ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்காக விளம்பரம் செய்வதற்காக மதியுரைப் பெறுகைக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் தொடரிலக்கம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | பொருளிருப்பு பதிவேடு வருடாந்தம் சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) | 2 சந்தர்ப்பங்களின் போது இருப்புப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்ட வியாபார குறியீட்டு பெயர்கள் பௌதீக ரீதியாக காணப்படுகின்ற வியாபார குறியீட்டு பெயர்களுடன் வேறுபட்டிருந்தன. |
| (இ) முற்பணங்களை வழங்குதல் | | முற்பணங்களை தீர்ப்பனவு செய்ய நீண்ட காலம் எடுத்திருந்தமை. |
| (ஈ) கணக்கீடு | | ஒரு நாட்குறிப்பு பதிவு இலக்கத்தின் கீழ் இரண்டு நாட்குறிப்பு பதிவுகள் பதிவு செய்யப்படுகின்ற சந்தர்ப்பம் காணப்பட்டமை. |
| (உ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு | | நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைக்கும் போது பங்குபற்றுவோரின் எண்ணிக்கை சரியாக எதிர்வுகூறப்பட்டிருக்காமை. |